# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 1/2014** **நாள் : 01/01/2014**

## மாநில நிர்வாகிகள் கூட்டம்

ஜனவரி 02/ 2014
சென்னை

**நிகழ்ச்சி நிரல்:**

1. **அஞ்சலி**
2. **தலைவர் உரை**
3. **சிஐடியு மாநிலக்குழு முடிவுகள்**
4. **ஊதிய உயர்வு, ஒப்பந்தம், நமது அணுகுமுறை**
5. **தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு**
6. **டிசம்பர் 11, EEFI கருத்தரங்கம்/டெல்லி**

   **டிசம்பர் 12, டெல்லி பேரணி**
7. **2013 ஆம் ஆண்டு உறுப்பினர் நிறைவுப்படுத்துதல்**
8. **2012 ஆம் ஆண்டின் மத்திய அமைப்பின் வரவு-செலவு உள்முகத் தணிக்கை**
9. **இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பின் (EEFI) விரிவடைந்த செயற்குழு**
10. **இதரவைகள்**

# தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் அளிக்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு சம்மந்தமாக தமிழக முதலமைச்சரின் அறிவிப்புகள்

1. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் தற்போதைய ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் ஏழு விழுக்காடு உயர்வு வழங்கப்படும்.

2. இந்த ஏழு விழுக்காடு ஊதிய உயர்வு காரணமாக, ஒவ்வொரு தொழிலாளருக்கும் மாதமொன்றுக்கு குறைந்தபட்சம் 700 ரூபாயும், அதிகபட்சம் 13,160 ரூபாயும் ஊதிய உயர்வு கிடைக்கும்.

3. பத்து ஆண்டு அல்லது அதற்கு மேல் பணியாற்றிவர்களுக்கு பணிக்காலம் பயனாக ஓர் ஆண்டு ஊதிய உயர்வு, அதாவது 3 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்கப்படும்

4. தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையைப் பொறுத்த வரையில், அரசாணை எண் 237, நிதித்துறை நாள் 22.07.2013-ன்படி தமிழக அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஊதிய உயர்வு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் அளிக்கப்படும்.

5. காலமுறை ஊதியத்தில், அதிகபட்ச ஊதிய நிலையை எட்டிய போதும், ஆண்டுக்கொரு முறை தேக்க நிலை ஊதிய உயர்வு (Stagnation Increment) வழங்கப்படும்.

6. தற்போதுள்ள ஊதிய விகிதம் மற்றும் தர ஊதியம் (Scale of Pay and Grade Pay) மாற்றமின்றி தொடர்ந்து வழங்கப்படும்.

7. தற்போதுள்ள படிகள் மற்றும் சிறப்பு ஊதியம் (Allowances and Special Pay) மாற்றமின்றி தொடர்ந்து வழங்கப்படும்.

8. தற்போதுள்ள 3 சதவீதம் ஆண்டு உயர்வு (Increment) தொடர்ந்து வழங்கப்படும்.

9. பணியில் சேர்பவர்களுக்கான அதிகபட்ச பயிற்சி காலம் ஓராண்டாக இருக்கும். பயிற்சி காலத்தில் தொகுப்பு ஊதியம் வழங்கப்படும். தற்போது ஓராண்டிற்கு குறைவாக பயிற்சி காலம் உள்ள பதவிகளுக்கு தற்போது உள்ள நிலையே தொடரும். பயிற்சி காலம் முடிந்ததும் காலமுறை ஊதியம் (ஊதியம் மற்றும் தர ஊதியம்) வழங்கப்படும். இது ஒப்பந்தத் தேதியிலிருந்து செயல்பாட்டுக்கு வரும்.

10. இந்த ஊதிய உயர்வு 1.12.2011 முதல் நடைமுறைக்கு வரும். 1.12.2011 முதல் 31.12.2013 வரையிலான 25 மாதங்களுக்கான ஊதிய மாற்ற நிலுவைத் தொகை ரொக்கமாக இரண்டு தவணைகளில் வழங்கப்படும். முதல் தவணை ஜனவரி 2014-லும், இரண்டாவது தவணை ஏப்ரல் 2014-லும் வழங்கப்படும்.

11. இந்த ஊதிய மாற்ற ஒப்பந்தம் 1.12.2011 முதல் 30.1.2015 வரை நான்கு ஆண்டுகள் அமலில் இருக்கும்.

    இந்த ஊதிய மாற்ற ஒப்பந்தத்தின் மூலம் 70,820 பணியாளர்கள் மற்றும் 10,160 அதிகாரிகள் என மொத்தம் 80,980 பணியாளர்கள் பயன் பெறுவர்.

    இந்த ஊதிய உயர்வு ஒப்பந்தத்தால், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 252 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். ஊதிய மாற்ற நிலுவை தொகை வழங்கும் வகையில் 525 கோடி ரூபாய் செலவு ஏற்படும். இச்செலவினங்கள் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படும்.

...என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

நாள் : 02.01.2014

## வாரியத் தலைவரின் கவனத்திற்கு

அய்யா,

31.12.2013 அன்று வாரியத் தலைவரோடு பேசியதன் அடிப்படையில் சமீபத்தில் ஏற்பட உள்ள ஊதிய உயர்வு சம்மந்தமான நகல் ஆலோசனையில் இணைக்கப்பட வேண்டியவைகள்..

1. 10.08.2007 ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், வாரிய உத்தரவு (Per.B.P. (FB) No 45 Administrative Branch, Dated 06.09.2007 -ன்படி மின்வாரியத்தில் பணியாற்றும் களஉதவியாளர், களஉதவியாளர் மற்றும் மின்எரிப்பு கணக்கீட்டாளர் (Helper Cum Meter Reader) கணக்கீட்டாளர் 2ம் நிலை (Assessor IInd Grade) ஆகியோர்கள் அடுத்த பதவி உயர்வுக்கு 5 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

   - என்ற சரத்து நீக்கப்பட்டு, **மேற்கூறியவர்கள் அடுத்த பதவி உயர்வுக்கு பணிவிதிகள் (Service Regulation) அடிப்படையில் இரண்டாண்டு காலம் என்று மாற்றி அமைக்கப்பட வேண்டும்.**

2. மின்வாரியத்தில் பணியாற்றும் நிரந்தரப்படுத்தப்பட்ட பகுதி நேர ஊழியர்களுக்கு தமிழக சத்துணவு ஊழியர்களுக்கு சம்பள விகிதம் மாற்றி அமைத்ததைப் போல் **01.09.2006-ஆம் ஆண்டு முதல் 600-10-700-20-1100 என்பது 1300-20-1500-25-2000 என்று மாற்றி அமைக்கப்பட வேண்டும்.**

புத்தாண்டு வாழ்த்துக்களுடன்
தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்